சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –21.02.2025

ம.சா.3–சுவேதாஸ்ரீ த/பெ – விநாயகமூர்த்தி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஏற்கனவே நானும், எதிர்மனுதாரரும் பரஸ்பர விவாகரத்து கோரி இதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவினை இவ்வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் எதிர்கால ஜீவனாம்சம் கோர மாட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் மனு நானும், எதிர்மனுதாரரும் சேர்ந்து தாக்கல் செய்த சம்மத விவாகரத்து மனுவின் சான்றிட்ட நகல் தான். அது **எ.ம.சா.ஆ.6** ஆகும். எ.ம.சா.ஆ.6 ல் பாரா –7 ல் கடந்த கால, நிகழ்கால, எதிர்கால ஜீவனாம்சம் கோர மாட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சம்மத விவாகரத்து என்பதால் அவ்வாறு சொன்னேன். எ.ம.சா.ஆ.6 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது திருமணத்தின் போது எனக்கு 90 பவுனும், எதிர்மனுதாரருக்கு 5 பவுன் நகைகள் என் பெற்றோரால் போடப்பட்டது. என் பெற்றோர் வசதியாக உள்ளனர், எனது தகப்பனார் விருதுநகரில், மல்லி வியாபாரம் தொழில் செய்து வருகிறார். என் தகப்பனாரின் வியாபார தலம் விருதுநகர்,கட்டையாபுரத்தில் உள்ள எங்கள் சொந்த கட்டிடம். எனது தகப்பனார் வருமான வரி செலுத்தி வருகிறார். அந்த வருமான வரி கணக்கை தாக்கல் செய்தால் எனது தகப்பனாரின் உண்மையான வருமானம் தெரியவரும் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு வங்கி கணக்குகள் உள்ளது. அதை தாக்கல் செய்தால்

அவரது வருமானம் பற்றி தெரியவரும் என்றால் சரிதான். எனது பெற்றோர்களுக்கு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்று விபரம் எனக்கு தெரியாது. அவர்களை விசாரித்தால் தெரியவரும். அவர்களை என் தரப்பு சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் அவர்களை விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு வங்கி கணக்குகள் எதுவும் இல்லை. UPI, Gpay பரிமாற்றம் இல்லை. நான் கல்லூரியில் படிக்கும் போது விருதுநகர், TMB வங்கி மெயின் கிளையில் மைனர் கணக்கு தொடங்கப்பட்டது. நான் மேஜர் ஆனவுடன் அதை புதுப்பிக்கவில்லை. எனது போனை பரிசோதித்தால் UPI, Gpay பரிமாற்றம் தெரியவரும் என்றால் சரிதான். எனது போனை வழக்கில் தாக்கல் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை. TMB வங்கியின் எனது வங்கி கணக்கினை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனக்கு வைரபதக்கம் வைத்த 12 பவுன் நகை எனது கணவர் போட்டார் என்றால் சரியல்ல, 7 பவுனில் டைமண்ட் இல்லாத செயின் மட்டும் போட்டார்கள். அந்த செயின் தஞ்சாவூரில் உள்ள ஒரு மாரியம்மன் கோவில் உண்டியலில் பெட்டியில் போட்டு விட்டேன். அந்த கோவில் உள்ள தெரு பெயர் தெரியாது. அப்போது என்னுடன் எனது பெற்றோர் வந்தார்கள், ஆனால் அவர்கள் காரிலேயே இருந்தார்கள், கோவிலுக்கு வரவில்லை. தஞ்சாவூருக்கு எதற்காக சென்றோம் என்றால் பொதுவாக அங்குள்ள கோவில்களுக்கு செல்ல வேண்டும் என்று சென்றோம். மாரியம்மன் கோவில் அங்கு தான் உள்ளது என்று எனக்கு எப்படி தெரியும் என்றும், காரில் செல்லும் போது அந்த கோவிலை பார்த்தேனா என்றால் அல்லது

நடந்து செல்லும் போது அந்த கோவிலை பார்த்தேனா என்றால் விரக்தியில் மேற்படி நகையை அந்த கோவிலின் உண்டியலில் போட்டேனா என்றால் அது பற்றி எனக்கு சொல்ல தெரியவில்லை. என் பெற்றோரை விசாரித்தால் நான் தஞ்சாவூருக்கு சென்றது பற்றி தெரியவரும் என்றால் சரிதான். நான் 2019 ல் பி.டெக் பாலிமர் சயின்ஸ்-மும், எம்.டெக் 2023 லும் முடித்தேன். அதில் நான் 8.4/10 மதிப்பெண் பெற்றேன். படித்து முடித்ததில் இருந்து நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை, அதற்கான முயற்சியும் செய்யவில்லை. நான் திருமணத்திற்கு முன்பு என் செலவுகளை என் பெற்றோர் பார்த்து கொண்டனர். திருமணத்திற்கு பின்னர் நான் எம்.டெக் படித்த போதும் என் பெற்றோர் தான் அதற்கான செலவுகளை செய்தனர். எனக்கு போதிய திறமை இருந்தும் எந்த வேலைக்கும் செல்லாமல் எதிர்மனுதாரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வீட்டில் ஓய்வாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மீது நான் ஜீவனாம்சம் கேட்டு வேறு வழக்கு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருந்தும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.